DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.41/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஷ்வநாதன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனிச்சாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 27.05.2024.

**முதல் விசாரணை**

நான் உடுமலையில் வசித்து வருகிறேன். பைக் கன்சல்ட்டிங் வைத்துள்ளேன். 23.02.2017ம் தேதி காலை 8.15 மணி அளவில் எனது சொந்த வேலையாக நானும் ரவிச்சந்திரன் என்பவரும் லட்சுமி நகர் வழியாக போய்க் கொண்டிருந்தோம் அங்கு ஆய்வாளர் நின்று கொண்டிருந்தார். எங்களை கூப்பிட்டு சாட்சி கையெழுத்து போட சொன்னார் அவர் படம் வரைந்து கொண்டிருந்தார். படித்து பார்த்துவிட்டு கையெழுத்து போடுமாறு சொன்னார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நீங்கள் எங்கு குடியிருக்கிறிர்கள் என்றால் குடிமங்கலம். குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் 11 கி.மீ. சம்பவ இடத்திற்கு யார் அழைத்ததன் பேரில் சென்றேன் என்றால் பொதுவாக சென்றேன். சம்பவ இடத்திற்கு செல்லும்போது கூட்டமாக

இருந்தார்களா என்றால் ஆமாம். நீங்கள் கையொப்பம் இட்ட தாளில் என்ன விவரம் இருந்தது என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடம் எங்கு என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்பது பற்றி தெரியாது என்றால் லட்சுமி நகர். சம்பவ இடத்தை சுற்றி குடியிருப்புகள் நிறைய உள்ளது என்றால் ஆமாம். புகார்தாரர் உங்களது நண்பர் என்றால் இல்லை. புகார்தாரர் உங்களது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

2) நான் சம்பவ இடத்திற்கு செல்லாம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி கேட்டுக் கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 41/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சுப்பையா கவுண்டர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 27.05.2024.

**முதல் விசாரணை**

நான் சுங்கார மக்கில் வசித்து வருகிறேன். பேன்சி கடை வைத்துள்ளேன். 23.02.2017 ம் தேதி காலை 8.00–8.30 மணி அளவில் ஏரிப்பாளையம் அருகில் உள்ள லட்சுமி நகரில் நானும் எனது நண்பரும் விஷ்வநாதனும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆய்வாளர் சாட்சி கையெழுத்துவேண்டும் என்று கேட்டார்கள். சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். சாட்சியாக கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நீங்கள் எங்கு குடியிருக்கிறிர்கள் என்றால் சுங்கார மடக்கில். குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 12 கி.மீ. சம்பவ இடத்திற்கு யார் அழைத்ததன் பேரில் சென்றேன் என்றால் கடைவீதிக்கு சென்றோம். நீங்கள் கையொப்பம் இட்ட தாளில் என்ன

விவரம் இருந்தது என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடம் எங்கு என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்பது பற்றி தெரியாது என்றால் லட்சுமி நகர். சம்பவ இடத்தை சுற்றி குடியிருப்புகள் நிறைய உள்ளது என்றால் உள்ளது. புகார்தாரர் உங்களது நண்பர் என்றால் இல்லை. புகார்தாரர் உங்களது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

2) நான் சம்பவ இடத்திற்கு செல்லாம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி கேட்டுக் கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.